## விவேகானந்த கேந்திர
## கிராம முன்னேற்றத் திட்டம்
## 2021 – ஏப்ரல் மற்றும் மே மாத அறிக்கை

### விவேகானந்த கேந்திர அன்பர்கள் மற்றும் தொண்டர்களுக்கு,



**அன்புகலந்த வணக்கங்கள்.**

**விவேகானந்த கேந்திர கிராம முன்னேற்றத் திட்டத்தின் வாழ்த்துக்கள்.**

**ஏப்ரல் மற்றும் மே மாதத்து கேந்திர சேவைப் பணிகள் பற்றிய அறிக்கைகளை தங்களுக்கு அளிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். கடுமையான நோய் தொற்று காலத்திலும் கேந்திரத் தொண்டர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் அன்பர்கள் பணிகளை நடத்தியிருப்பது பாராட்டுக்குரியது.**

**பிலவ வருடம் தமிழ்ப்புத்தாண்டு தினம், இராமநவமி, அக்ஷய திருதியை போன்ற பண்டிகைகள் மூலம் மக்கள் மனத்தில் அச்சமும், சோர்வும் நீங்கி ஆரோக்கியமும், உற்சாகமும் பெருக இறைவனை வேண்டுகிறோம்.**

**இவண்,**
**இறைவன் பணியில்,**

**(சு.ஐயப்பன்)**

காப்பகங்களில் குழந்தைகளுக்கான சத்துணவு பெற்றோர்களுக்கு வழங்கும் காட்சிகளில் சில

குழந்தைகள் காப்பகங்கள் கொரோனா காலகட்டமாக இருப்பதால் திறக்கப்படாத சூழலில் குழந்தைகளுக்கான சத்துணவு, பொருட்களாக மாதத்திற்கு ஒருமுறை பெற்றோர்கள் கையில் கொடுக்கப்படுகிறது. இதில் 75 காப்பகங்களில் உள்ள 1974 குழந்தைகள் பயன் பெறுகின்றனர்.

பொத்தையடி
திருநெல்வேலி மாவட்டம்



ஆண்டார்குளம்
கன்னியாகுமரி மாவட்டம்



மருத்துவ மையம்
கொம்பன்குளம்




கன்னியாகுமரி, நெல்லை, மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 14 மருத்துவ மையங்களில் 1531 நபர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். தென்காசி அருகில் உள்ள இலஞ்சியில் மாதத்திற்கு 4 அல்லது 5 முறை நடைபெறும் சித்த மருத்துவ முகாம்களில் 925 நபர்கள் கலந்து கொண்டு சித்தா, ஆயுர்வேத மருந்துகள் மூலம் நோய் நீங்கி ஆரோக்கியம் பெற்று வருகின்றனர்.

கன்னியாகுமரி மற்றும் நெல்லை மாவட்டங்களில் கடந்த இரண்டு மாதங்களில் 2 இடங்களில் நடைபெற்ற இலவச கண்பரிசோதனை முகாம்களில் இருந்து 265 வெளிநோயாளிகள் பயனடைந்தனர். 90 பேர் கண்புரை அறுவைசிகிச்சை செய்து கண்ஒளி பெற்றனர். 7 பேருக்கு கண் மருந்துகள் வழங்கப்பட்டன.

கன்னியாகுமரி முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட கண்புரை நோயாளிகள் அடையாளமிட்டு அழைத்துச் செல்லுதல்



கண்பரிசோதனை முகாம் – அம்பை



முதியவர்களுக்கு அரிசி வழங்குதல் – வள்ளியூர்



விவேகானந்த கேந்திரம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட வயது முதிர்ந்த பெரியவர்கள் 129 பேருக்கு மாதம் தோறும் அரிசியும் 32 பெரியவர்களுக்கு அரிசி, பருப்பு, எண்ணெய், மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களும் கொடுக்கப்படுகிறது. இப்பணி தென் தமிழகத்தின் ஐந்து மாவட்டங்களிலும் நடைபெறுகிறது.

எல்லோராலும் தலைவனாக இருக்க முடியும். ஆனால் தொண்டனாக இருப்பது மிகவும் கடினம். – சுவாமி விவேகானந்தர்

பெண்களுக்கான தையல் பயிற்சி மையங்கள் நெல்லை மற்றும் தென்காசி மாவட்டங்களில் உள்ள 6 கிராமங்களில் நடைபெறுகிறது. இதில் 153 பெண்கள் தையல் பயின்று வருகின்றனர்.

ஐந்து மாவட்டங்கள் மற்றும் தூத்துக்குடி அலுவலகம் சேர்த்து புத்தக விற்பனை இரு மாதங்களில் ரூ. 21,741/– நடைபெற்றது.

சங்கரன்குடியிருப்பு
மருத்துவ மையம்
புதிய கட்டிட திறப்பு விழா



விவேகானந்த கேந்திரம் சங்கரன்குடியிருப்பு மருத்துவ மையம் புதிய கட்டிடம் 21.06.2021 திறந்து வைக்கப்பட்டது. சங்கரன்குடியிருப்பைச் சேர்ந்த திரு. முரளி அவர்களால் கட்டி வழங்கப்பட்டது. இக்கட்டிடம் மருத்துவர் அறை, மருந்து வழங்கும் அறை, கழிவறை போன்ற வசதிகளுடன் மார்பில் தரையுடன் சிறப்பாக உள்ளது. இதில் ஊராட்சித் தலைவர் திரு. பாலமேனன் மற்றும் உள்ளூர் அன்பர்கள் கலந்து **கொண்டனர். டாக்டர். சுஜிதா** BSMS., MD, நோயாளிகளை பரிசோதித்து மருந்துகள் வழங்கினார். தன்னார்வத் தொண்டர் & கேந்திர அன்பர் திரு. ஈஸ்வர மூர்த்தி, சமூகத் தொண்டர் திரு. சண்முகபாரதி மற்றும் மருத்துவ உதவியாளர் திரு.பொன்னுசாமி ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.விழாவில் சிறப்பு விருந்தினராக தட்டார்மடம் மருத்துவர் டாக்டர். தினேஷ்பாபு வந்திருந்தார். புதிய கட்டிடம் கட்டிகொடுத்த நன்கொடையாளர் திரு. முரளி அவர்களுக்கு விவேகானந்த கேந்திரம், ஊர்மக்களும் தங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார்கள்.

இராம நவமி தூத்துக்குடி மாவட்டத்தில் 9 இடங்களில் நடைபெற்றதில் 157 பேர் கலந்து கொண்டனர். தூத்துக்குடி அலுவலகத்தில் VKRDP மற்றும் தூத்துக்குடி கிளை இணைந்து இராமநவமி நிகழ்ச்சி நடைபெற்றதில் சுமார் 150 பேர் கலந்து கொண்டனர். நகர்சஞ்சாலக் திருமதி. சுபத்ரா வெற்றிவேல் திருவிளக்கு ஏற்ற, திரு.பாலமுருகன் வரவேற்புரை நல்கினார். தூத்துக்குடி கல்விக் குழுவின் செயலாளர் திரு.சோமு அவர்கள் தலைமையுரை நிகழ்த்தினார். இந்நிகழ்ச்சிக்கு முன்பாக சச்சிதானந்த சபை குழுவினர் மற்றும் கேந்திர சகோதரிகளின் இராமநாம சங்கீர்த்தனம், பக்திப் பாடல்கள் நடைபெற்றன. சிவாஞ்சலி நாட்டிய பள்ளிக் குழுவினர் சார்பாக மாணவிகளின் ஆனந்த நர்த்தனம், இராமனுக்கு மன்னர் முடிதரித்தாலே, காவடிச் சிந்து போன்ற பல நாட்டியப் பாடல்களுக்கு சிறப்பாக நடனம் ஆடினர். காமராஜ் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர்.வான்மதி, இராமனின் சிறப்புக்கள் பற்றி எடுத்துக் கூறினார். நாட்டியப் பள்ளி மாணவிகளுக்கு பரிசுகளும், சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவுப் பரிசுகளும், திருமதி. சுபத்ரா வெற்றிவேல், திரு. சோமு ஆகியவர்கள் வழங்கினார்கள். செயலாளர் அவர்களின் நன்றியுரை மற்றும் கேந்திரப் பிரார்த்தனையுடன் நிகழ்ச்சி இனிதே நிறைவு பெற்றது.

ராமநவமி விழா – தூத்துக்குடி







கடினமாக உழைப்பவனிடம் கடவுள் தாமாகவே வருகிறார்.

– சுவாமி விவேகானந்தர்

கேந்திர வர்கா & யோக வர்கா ஆகியவை கோவில்பட்டி மற்றும் அருப்புக்கோட்டையில் தலா இரண்டு இடங்களில் நடைபெற்றன. இதில் முறையே 18 மற்றும் 15 நபர்கள் கலந்து கொண்டனர்.

வாராந்திர சமயவகுப்பு 119 இடங்களில் நடைபெற்றதில் 2550 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் இந்தியப் பண்பாடு, கலாச்சாரம், கதைகள், தேசபக்தி, தெய்வபக்திப் பாடல்கள் மற்றும் நற்குணங்களை விதைக்கும் விளையாட்டுக்களும் சொல்லித்தரப்படுகிறது.

மாதாந்திர தீப பூஜை தென் தமிழகத்தின் ஐந்து மாவட்டங்களில், 21 கிராமங்களில் உள்ள கோவில்களில் நடத்தப்பட்டதில் 489 பெண்கள் கலந்து கொண்டு நாடு, சமூதாயம் மற்றும் வீட்டின் நலனிற்காகவும் பிரார்த்தனை செய்தார்கள்.

அன்னபூஜை 14.04.2021 – தூத்துக்குடியிலும் 17.04.2021 – ஆண்டார்குளத்திலும் மற்றும் 24.04.2021 – பேயன்குழியிலும் வைத்து நடைபெற்றன. இதில் மொத்தம் 205 பேர் கலந்து கொண்டனர், மொத்தம் 7410 கிலோ அரிசி சேகரிக்கப்பட்டது.

## அன்னபூஜை – தூத்துக்குடி





## அன்னபூஜை – ஆண்டார்குளம்





## அன்னபூஜை – பேயன்குழி





பாராட்டிற்கும் பழிக்கும் செவிசாய்த்தால் மகத்தான காரியங்கள் எதையும் சாதிக்க முடியாது. – சுவாமி விவேகானந்தர்.

இந்த இரு மாதங்களில் அமுதசுரபித்திட்டத்தின் கீழ் மாதம்தோறும் 190 வீடுகளில் இருந்து 1394 கிலோ அரிசி சேகரிக்கப்பட்டது.

பெற்றோர் கூட்டம் தூத்துக்குடி மற்றும் இராமநாடு மாவட்டங்களில் உள்ள 16 பால்வாடிகளில் நடைபெற்றதில் 345 பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

விவேகவாணி மாத இதழ் ஓராண்டு சந்தா 138, மூன்றாண்டு சந்தா ஒன்று மற்றும் 15 பேட்ரான் பிரிக்கப்பட்டது.

## மனதைத் தொட்ட நிகழ்ச்சிகள்

**செண்பகம் – கே. தங்கம்மாள்புரம் – தூத்துக்குடி மாவட்டம்**

ஒரு குழந்தையின் பெயர் கே. அருணா அந்தக் குழந்தையின் வயது 6. அந்தக் குழந்தை நமது காப்பகத்திற்கு தினமும் வரும் பொழுது சுவாமிஜி படத்திற்கு மலர்களை கொண்டு வந்து போடுவாள். அந்தக் குழந்தை இப்பொழுது 1 ம் வகுப்பிற்கு செல்லும் தகுதியுடையவளானாள். அதனால் இனிமேல் யார் பூ கொண்டு வருவார்கள் என்று கூறும் போது, டீச்சர் இனிமேலும் நானே கொண்டு வந்து நமது காப்பகத்தில் கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு 1–ம் வகுப்பிற்கு ( பள்ளிக்கு) செல்கிறேன் என்று பொறுப்புடன் கூறினாள். எங்களுக்கு சந்தோஷமாக இருந்தது. இந்த சின்ன சிறுவயதிலே பொறுப்பு, அன்பு, தன்னம்பிக்கையுடன் இருக்கும் குழந்தைகளைப் பார்க்கும் போது இன்னும் 1000 குழந்தைகளை உருவாக்க வேண்டும் என்று ஒரு ஆர்வம் வந்தது. இது என் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

**ரம்யா – கீழமுந்தல் – இராமநாதபுரம் மாவட்டம்**

நான் கீழமுந்தலில் உள்ள பாலர்காப்பகத்தில் ஆசிரியராக பணியில் சேர்ந்த முதல் நாள் அன்று அனைத்து குழந்தைகளுக்கும் இனிப்பு கொடுத்தோம். அப்பொழுது மனோஜ் என்ற குழந்தை அனைத்து குழந்தைகளையும் பார்த்து மிட்டாய் தாள்களை கீழே போடாதீர்கள் குப்பை தொட்டியில் போடுங்கள் என்று கூறினான். இந்த நிகழ்ச்சியை பார்த்து எனக்கு இந்த சிறுவயதில் அவனின் நல்ல பழக்கம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இதுவே என் மனதைத் தொட்ட நிகழ்ச்சி.

**வில்வகனி – பெருநாழி – இராமநாதபுரம் மாவட்டம்**

ஜீன் மாத குழந்தைகளின் வருக்காக ஒவ்வொரு வீடாக சென்று, பெற்றோர்களை ஒவ்வொரு வீடாக சென்று, பெற்றோர்களை சந்தித்து நம் பள்ளிக்கு அனுப்புமாறு கூறினோம். நமது பாலர் பள்ளியைப் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறினோம். மேலும் இங்கு சத்தான உணவும், சிறந்த கல்வியும், நல்லொழுக்கம் பற்றியும் சொல்லித் தருகிறோம். குழந்தைகளையும் நன்றாக கவனித்துக் கொள்வோம் என கூறினோம். அப்படி, ஒவ்வொரு வீடாக போகும் போது, ஒரு பையன் டீச்சர் என கத்திக் கொண்டு, ஓடிவந்து என்னைக் கட்டிப் பிடித்தான் ஒரு நிமிஷம் எனக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்கு பிறகு தான் தெரிந்தது நான் இதற்கு முன்னாடி ஒரு ஆறு மாத காலம் பணிபுரிந்துவிட்டு, பிரசவத்திற்காக நின்று விட்டேன். அப்பொழுது என்னிடம் படித்த மாணவன்தான் என்று எனக்கு அப்பொழுதுதான் தெரிந்தது. நான் அவனிடம் சிஷீது நேரம் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது அவன் என்னிடம் கூறினான், என் தம்பியை உங்க பள்ளியில் சேர்க்க சொல்லி அம்மாவிடம் சொல்கிறேன். எனக்கு பெருமையாக இருந்தது. இது மனதைத் தொட்ட நிகழ்ச்சி.

**முத்தமிழ்செல்வி – பெருநாழி – இராமநாதபுரம் மாவட்டம்**

எங்கள் பாலர்காப்பகத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் படிக்கிறார்கள் ஒருநாள் கார்த்திக்–ன் தங்கை அழ ஆரம்பித்துவிட்டாள். அவளை பார்த்து அவளுடைய அண்ணன் கார்த்திக்கும் அழுதான். நான் சமாதானம் பண்ணியும் கேட்கவே இல்லை. கார்த்திக் அழுது கொண்டே அவன் தங்கைக்கு விளையாட்டு பொருட்களை எடுத்து கொடுத்தான். அப்பொழுதும் அவள் அழுகையை நிறுத்தவில்லை. உடனே அவளை தன் மடியில் படுக்க வைத்து தட்டி கொடுத்தான். சிறுது நேரம் கழித்து அவள் அழுகையை நிறுத்தினாள். அதை பார்த்து எனக்கு சந்தோஷமாக இருந்தது. எனக்கு ஆச்சரியம் என்னவென்றால் அவன் சிஷீது மனநலம் பாதிக்கப்பட்டவன் அவனால் எதையும் எளிதாக புரிந்து கொள்ள முடியாது அவன் தங்கையை சமாதானப் படுத்தியது ஆச்சரியமாக இருந்தது மட்டுமல்லாது என் மனதைத் தொட்ட நிகழ்ச்சியாக அமைந்தது.

**மஞ்சு – செவல்பட்டி – திருநெல்வேலி மாவட்டம்**

எங்களது பாலர்காப்பகத்தில் படிக்கும் விக்னேஷ்வரன் என்ற குழந்தையை பெரிய பள்ளிகூடத்தில் சேர்ப்பதற்காக அவன் அம்மா அழைத்து சென்றிருக்கிறார்கள். அப்போது அங்கு உள்ள தலைமை ஆசிரியர் நீ இதற்கு முன்னாடி பாலர்பள்ளிக்கு போயிருக்கயா என்று கேட்டார்களாம். அதற்கு அவன் நான் விவேகானந்த கேந்திர பாலர்காப்பகத்திற்கு போனேன். அங்கே உனக்கு யாரை பிடிக்கும் என்று கேட்டார்களாம் அதற்கு அவன் எங்க மஞ்சு டீச்சர் எனக்கு ரொம்ப பிடிக்கும். அவங்க உனக்கு என்ன சொல்லிக் கொடுத்தாங்க அப்படின்னு கேட்டார்களாம் எல்லாமே சொல்லிருக்காங்க

அப்படின்னு எல்லாத்தையும் சொன்னாம் பிறகு அந்த தலைமை ஆசிரியர் நல்ல பையன் என்று கூறி சாக்லெட்கொடுத்தார்களாம். பிறகு அந்த பையன் எங்க மஞ்சு டீச்சரையும் பள்ளியில் சேர்ப்பீங்களா? நான் மஞ்சு டீச்சர் வந்தால்தான் வருவேன் இல்லைனா விவேகானந்த கேந்திர பள்ளிக்கே சென்றுவிடுவேன் என்றானாம். அந்த தலைமை ஆசிரியரும் சரி என்னிருக்கிறார். பிறகு அவர் 15 நாள் கழித்து பள்ளிக்கு கூட்டிட்டுவர சொன்னாராம். சரின்னு கூறிவிட்டு வந்தார்களாம். பின்பு கேட் வரைக்கும் வந்திட்டு ஓடி போய் அவரிடம் 15 நாள் கழித்து எங்க மஞ்சு டீச்சரையும் கூட்டிட்டு வரலாமா என்று கேட்டிருக்கிறான். அவரும் சரி என்று கூறி ஆச்சரியப்பட்டாராம். அவன் அம்மா என்னிடம் கூறியதும் எனக்கு அழுகையே வந்துவிட்டது. இவ்வளவு என்மேல் குழந்தைகள் பாசமாக இருப்பதை நினைத்து சந்தோஷமாக இருந்தது. இதுவே என் மனதைத் தொட்ட நிகழ்ச்சியாகும்.

**விஜயகுமாரி – மன்னார்கோவில் – திருநெல்வேலி மாவட்டம்**

எங்கள் பாலர் காப்பகத்தில் சுபத்ரா என்ற சிறுமிக்கு 3 வயது ஆகிறது. அவள் தூங்கி விட்டு எழுந்திருந்திருக்கிறாள் அவள் படுத்த இடத்தில் 2 ரூபாய் இருந்திருக்கிறது. அவள் எடுத்து என்னிடம் வந்து கொடுத்தாள். யார் ரூபாய் என்றேன் தெரியவில்லை என்று கூறினாள். இந்த சிறு வயதிலேயே அடுத்தவரின் பொருளுக்கு ஆசைபடாமல் என்னிடம் கொடுத்தது என் மனதைத் தொட்ட நிகழ்ச்சியாகும்.

**பிரபா – காவல்கிணறுபுதூர் – தூத்துக்குடி மாவட்டம்**

எங்கள் பாலர் காப்பகத்தில் ஸ்ருதிகா என்ற மாணவி வீட்டில் 17.4.19 அன்று அனைவரும் திருமண வீட்டிற்கு செல்ல வேண்டும் என்று கிளம்பியிருக்கிறார்கள் அதற்கு ஸ்ருதிகா மட்டும் நான் வரவில்லை எங்கள் பள்ளியில் பாயாசம் கொடுப்பாங்க என்று அழுதிருக்கிறாள். அவள் அம்மாவும் காப்பகத்திற்கே கொண்டு வந்து விட்டுவிட்டு. இன்று என்ன பாயாசம் கொடுப்பீங்களாமே என்று கேட்டாங்க. அதற்கு, நாங்க கொடுக்கும் கேப்பை கூழைத்தான் பாயாசம் என்கிறாள் என்றோம். இந்த நிகழ்ச்சி என் மனதைத் தொட்ட நிகழ்ச்சியாகும்.

**விஜயலெட்சுமி – புதுக்கிராமம் – திருநெல்வேலி மாவட்டம்**

விவேகானந்த கேந்திர பாலர்காப்பகத்தில் பயிலும் பெவினா உதயஸ்ரீ என்ற மாணவிக்கும் இசக்கிபாண்டி என்ற மாணவனுக்கும் பதினோராவது மாதம் ஆகும் இரண்டு தங்கைகள் உள்ளனர். அவர்களிடம் உங்களுடைய தங்கையை நமது காப்பகத்திற்கு அழைத்து வாருங்கள் என்றேன். அதைக் கவனித்துக் கொண்டிருந்த சிவகார்த்திகா என்ற மாணவி என் அருகில் வந்து எங்கள் வீட்டிலும் பாப்பா உள்ளாள் நானும் அழைத்து வருகிறேன் என்றாள். இதில் என்ன ஆச்சர்யம் என்றால் அவள் பாப்பா பிறந்து ஒரு மாதமாகிறது. அவளுடைய ஆர்வம் என் மனதைத் தொட்டது.

**ஜானகிபுஷ்பம் – வள்ளியூர் – திருநெல்வேலி மாவட்டம்**

21.4.19 அன்று வி.கே.புரம் P.L.W.A.தூவக்கப்பள்ளியில் கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது. இரண்டு நாட்கள் ஜீப் பிரச்சாரத்திற்காக P.L.W.A மேல்நிலைப்பள்ளிN.S.S. மாணவர்கள் ஐந்து பேர் என்னுடன் வந்து, ஒவ்வொரு வீடாக, கடைகடையாகச் சென்று கண்முகாம் நோட்டீஸ் கொடுத்தார்கள். சுறுசுறுப்பாக இருந்தார்கள். கண்முகாம் அன்றும் ஐந்து பேரும் வந்திருந்து அவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணியினை சிறப்பாகச் செய்தார்கள். முகாம் நிறைவடைந்து அனைவரும் செல்லும் நேரத்தில் விஷ்ணு என்ற மாணவன் என்னிடம் தயங்கியபடியே அருகில் வந்து நின்றான். என்ன விஷயம் என்று நான் கேட்க அவன் என்னிடம், எத்தனை வயதில் நான் கேந்திரத் தொண்டராகச் சேரலாம். நீங்கள் செய்யும் பணிகளைப் பார்த்தும் எனக்கும் அது போலச் செய்ய வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது. நான் எப்போது சேரலாம் என்று கேட்டான். நான் அவனிடம் உன்னுடைய கல்லூரிப் படிப்பை முடித்ததும் தொண்டராகச் சேரலாம். அதுவரை தன்னார்வத் தொண்டராக பிரச்சாரப் பணி, விளக்குபூஜை பணி செய்யலாம் என்று கூஷினேன். இதுவே என் மனதைத் தொட்ட நிகழ்ச்சியாகும்.

**சந்திரா – அம்பை – திருநெல்வேலி மாவட்டம்**

விக்ரமசிங்கபுரத்தில் கடந்த 21.4.19 அன்று மாபெரும் இலவச கண்சிகிச்சை முகாமினை நமது விவேகானந்த கேந்திரம் மற்றும் சென்னை நீரழிவு நோய் நிபுணர் டாக்டர் நல்ல பெருமாள் அவர்களுடன் இணைந்து நடத்தியது. முகாமின் நிறைவுப் பகுதியின் போது டாக்டர் நல்ல பெருமாள் அவர்களின் தந்தையார் அவர்கள் முகாமினை சிறப்பாக நடத்திய கேந்திர சகோதர சகோதரிகள், நெல்லை அரவிந்த் கண்மருத்துவ குழுவினர்கள் மேலும் P.L.W.A மேல்நிலைப்பள்ளியின் சாரணார் அணியினர் ஆகிய அனைவருக்கும் விதைப்பந்துகள் பரிசாக வழங்கினார்கள் அந்த விதைப் பந்து நன்கு செழித்து வளர்ந்து பல ஆண்டு காலமாக மழைவளம் தந்து பயன்தரக் கூடியதாக இருந்தது. அந்த விதைப்பந்துகளை நாம் எறியும் இடங்களில் எல்லாம் மரங்கள் வளர்ந்து பயன்தரும். பரிசு கொடுப்பதிலும் நாட்டிற்கும் நமக்கும் நீண்ட காலம் வரை பயன்தரும் வகையில் பரிசு கொடுத்தது அனைவரையும் மகிழ்வித்த அவரது உள்ளத்தை எண்ணி மிக மகிழ்ச்சியாக இருந்தது.

கடமை ஒவ்வொன்றும் புனிதமானது. அதை பக்தியுடன் செய்வது மிக உயர்ந்த தெய்வ வழிபாடு. – சுவாமி விவேகானந்தர்.